بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 16/08/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

☆பனூ முஸ்தலிக் போர் குறிப்பில் (ஹஸ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட) இஃப்க் சம்பவத்தின் விரிவான விளக்கம்
☆பங்களாதேஷ், பாக்கிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆவுக்காக கவனமூட்டல்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

கடந்த சில குத்பாக்களில் பனூ முஸ்தலிக் போர் பற்றி கூறப்பட்டு வந்தது. இதைப் பற்றிய மேலும் விபரத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; பனூ முஸ்தலிக்கிலிருந்து திரும்பிச்செல்லும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் நகீஃ எனும் இடத்தை கடந்தார்கள். அங்கு மிகவும் பரந்த அளவிலான நிலப்பரப்பையும், புல்வெளிகளையும், பல்வேறு குளங்களையும் கண்டார்கள். அன்னார் அவற்றைக் குறித்து விசாரித்தபோது, கோடைகாலத்தில் இந்த குளங்களில் தண்ணீர் குறைந்து விடும் என்று கூறப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹாத்திப் பின் அபீ பல்தஅ (ரலி) அவர்களிடம், கிணறு வெட்டுமாறும், அந்த இடத்தை மேய்ச்சலிடமாக ஆக்குமாறும் கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் பிலால் பின் ஹாரிஸ் மஸ்னீ (ரலி) அவர்களை கண்காணிப்பாளராக நியமித்தார்கள். பொழுது விடியும்போது ஒருவரை மலை உச்சியில் நிற்கச் செய்து அவருடைய குரல் எங்கு வரை சென்றடைகிறதோ அங்கு வரை முஸ்லிம்கள் ஜிஹாதுக்காக பயன்படுத்தும் ஒட்டகங்களுக்காகவும் குதிரைகளுக்காகவும் மேய்ச்சல் நிலத்தை உருவாக்குங்கள் என்று அவர்களுக்கு கூறினார்கள். பலவீனமான ஆண் பெண்களும், ஏழை மக்களும் அந்த மேய்ச்சல் நிலத்தில் தம் செம்மறியாடுகளையும் ஆடுகளையும் மேய்ப்பதற்கு அன்னார் அனுமதி வழங்கினார்கள். இந்த மேய்ச்சல் நிலம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோரின் கிலாஃபத் காலகட்டம் வரை நிலைபெற்றிருந்தது. அதற்குப் பிறகு குதிரைகள் மற்றும் ஒட்டகங்களுடைய எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக இடத்தை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளை சுறுசுறுப்புடனும் புத்துணர்ச்சியுடனும் வைத்திருப்பதற்கு பெரும் ஏற்பாடுகளை செய்து வந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் அவ்வப்போது விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வந்தார்கள். அவற்றில் வீரம், துணிவு, நம்பிக்கை மற்றும் ஜிஹாது ஆகியவற்றின் தர்பிய்யத்தின் அம்சமும் மிகைத்து காணப்பட்டது. பனூ முஸ்தலிக் போரிலிருந்து திரும்பிச் செல்லும் போது நகீஃ எனும் இடத்தை அடைந்த போது பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கிடையில் குதிரை மற்றும் ஒட்டகங்களின் ஓட்டப்பந்தயங்களையும் நடத்தினார்கள். அன்னாருடைய கஸ்வா

எனும் பெண் ஒட்டகம் எல்லா ஒட்டகங்களையும் முந்திச் சென்றது. அதேபோன்று அன்னாருடைய ஸரப் எனும் குதிரை அனைத்து குதிரைகளையும் முந்திச் சென்றது.

இதே இடத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஓட்டப்பந்தயமும் நடத்தினார்கள். அதில் அன்னார் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை முந்திச் சென்று விட்டார்கள். பிறகு அவர்களிடம், நீங்கள் என்னை போன முறை முந்திச் சென்றதற்கு இது பதிலுக்கு பதில் ஆகும் என்று கூறினார்கள்.

இந்த கூற்றில் பெருமானார் (ஸல்) அவர்கள் முந்தைய சம்பவம் ஒன்றின் பக்கம் சுட்டிக்காட்டினார்கள். ஒருமுறை அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டுக்கு சென்றிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் கைகளில் ஒரு பொருளைக் கண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அதை பார்ப்பதற்காக கேட்டபோது அவர்கள் மறுத்துவிட்டு அங்கிருந்து ஓட ஆரம்பித்தார்கள். அன்னாரும் அவர்களை நோக்கி ஓடினார்கள். ஆனால் அவர்களோ கையில் அகப்படவில்லை; ஓடி விட்டார்கள். தம் வீட்டை மகிழ்ச்சிகரமாக ஆக்குவதற்காக அன்னார் இவற்றை செய்து வந்தார்கள். ஒவ்வொரு விஷயத்திலும் அன்னார் நமக்கு முன்னால் தம் அழகிய முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள். தம் மனைவிகள் மீது மிகக்கடுமையாக நடந்து கொள்ளக் கூடியவர்களுக்கும் இவை அழகிய முன்மாதிரியாகும். இன்றைய காலத்து மக்களுக்கும் இவை முன்மாதிரியாகும். பெண்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்வது தொடர்பாக இஸ்லாம் கற்றுத் தந்ததாகும் இது. அதற்கான முன்மாதிரியை பெருமானார் (ஸல்) அவர்கள் நிலைநாட்டி இருக்கிறார்கள்.

இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட குறிப்பும் காணக் கிடைக்கிறது. அதனுடைய விபரம் இவ்வாறு உள்ளது; பனூ முஸ்தலிக் போரிலிருந்து திரும்பிச் செல்லும் போது முனாஃபிக்கள் சார்பாக இன்னொரு குழப்பமும் ஏற்படுத்தப்பட்டது. அது என்னவென்றால், உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது ஒரு பொய்யான அவதூறை சுமத்திய சம்பவமாகும்.

ஸஹீஹ் புகாரியின் அறிவிப்பின் அடிப்படையில் அவதூறு சுமத்தப்பட்ட சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு பயணம் புறப்பட விரும்பினால் தம் மனைவிமார்களிடையே சீட்டுக் குலுக்கிப் போடுவார்கள். அவர்களில் எவருடைய (பெயருள்ள) சீட்டு வருகிறதோ அவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்படுவார்கள். இவ்வாறே, பெருமானார் (ஸல்) அவர்கள் புறப்படவிருந்த ஒரு போருக்காக எங்களிடையே சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். அதில் என்னுடைய பெயருள்ள சீட்டு வந்தது. அப்போது பர்தாவின் கட்டளை அருளப்பட்டு விட்டது. எனவே, நான் அன்னாருடன் புறப்பட்டுச் சென்றேன். பயணத்தின் போது நான் பல்லக்கின் உள்ளே இருந்தேன். மக்கள் என் பல்லக்கை தூக்கி ஒட்டகத்தின் மேல் வைத்து விடுவார்கள். எங்கு தங்க வேண்டுமோ அங்கு என் பல்லக்கை கீழே இறக்கி வைத்து விடுவார்கள். போர் முடிந்து திரும்பி வரும்போது நாங்கள் மதீனாவை நெருங்கியபோது இரவு நேரத்தில் புறப்படும்படி அன்னார் கட்டளையிட்டார்கள். நான் இயற்கைத் தேவையை நிறைவேற்றுவதற்காக வெளியே சென்று விட்டேன். நான் என் தேவையை முடித்துக் கொண்ட பின் என் சவாரியை நோக்கிச் சென்றேன். அப்போது என் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தேன். (என் கழுத்திலிருந்த) ஸஃப்பார் எனும் கல் மாலையொன்று அறுந்து விழுந்து விட்டிருந்தது.

எனவே, நான் அதை தேடிப்பார்ப்பதற்காக திரும்பிச் சென்று விட்டேன். என்னை பல்லக்கில் எடுத்துச் சென்று ஒட்டகத்தில் வைக்கும் குழுவினர் நான் இருப்பதாக எண்ணிக் கொண்டு அதைச் சுமந்து சென்று ஒட்டகத்தின் மீது வைத்து விட்டு சென்று விட்டனர். நான் என் மாலையை தேடிக் கண்டு பிடித்த பின்னர் முகாமிட்டிருந்த இடத்திற்கு திரும்பி

வந்த போது அங்கு எவரும் இருக்கவில்லை. அனைவரும் சென்று விட்டிருந்தனர். நான் ஏற்கனவே தங்கியிருந்த இடத்தைத் தேடிப் போனேன். நான் காணாமல் போயிருப்பதைக் கண்டு படையினர் என்னிடம் திரும்பி வருவார்கள் என்று நான் கருதினேன். நான் என்னுடைய இடத்தில் அமர்ந்திருக்கும் போது நான் கண்ணயர்ந்து தூங்கி விட்டேன்.

படையினர் தவற விட்டுச் செல்லும் பொருட்களை எடுத்து வருவதற்கு ஸஃப்வான் பின் முஅத்தல் (ரலி) என்பவர் பணியமர்த்தப் பட்டிருந்தார். நான் தங்கியிருந்த இடத்திற்கு அருகில் அவர் காலையில் வந்த போது அவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார். ஏனென்றால், பர்தா சட்டம் அருளப்படுவதற்கு முன்னர் அவர் என்னைப் பார்த்திருந்தார். அவர், இன்னா லில்லாஹ் என்று கூறும் சப்தத்தைக் கேட்டு நான் கண் விழித்தேன். நான் என்னுடைய போர்வையால் என் முகத்தை மறைத்துக் கொண்டேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் ஒரு வார்த்தைக் கூடப் பேசவில்லை. நான் அவருடைய ஒட்டகத்தில் ஏறிப் பயணித்தேன். இறுதியில் கடும் வெப்பத்தில் நடுப்பகல் நேரத்தில் நாங்கள் படையினரை வந்தடைந்தோம். அப்போது மக்கள் முகாமிட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: (இப்போது எங்கள் இருவரையும் கண்டு அவதூறு பேசி என் விஷயத்தில்) அழிந்தவர்கள் அழிந்து போனார்கள்! என் மீது அவதூறு செய்வதில் பெரும்பங்கு எடுத்துக் கொண்டிருந்தவன் அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் ஆவான்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் மதீனா சென்றடைந்த பிறகு நான் நோயுற்று விட்டேன். இந்த அவதூறு பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. நான் நோயுற்று இருந்த போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் வழக்கமாகக் காட்டுகிற பரிவை (இந்த முறை) நான் அவர்களிடம் காண முடியாமல் போனது என்னிடத்தில் நிம்மதியற்ற நிலையை ஏற்படுத்தியது. நான் நோயுற்றிருந்தபோது அன்னார் என்னிடம் வருவார்கள்; சலாம் கூறுவார்கள்; எப்படி இருக்கிறாய் என்று கேட்பார்கள்; பிறகு போய் விடுவார்கள். அவ்வளவு தான்! இந்த விஷயம் என்னை நிம்மதியிழக்கச் செய்திருந்தது.

மிஸ்தஹின் தாயாருடன் நான் ஒரு நாள் வெளியே சென்ற போதுதான் அவதூறு சுமத்தியவர்கள் தொடர்பாக எனக்கு தெரிய வந்தது. நான் என் வீட்டுக்கு திரும்பி வந்தபோது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் வந்தார்கள். அப்போது நான், என் தாய் தந்தையரிடம் செல்ல எனக்கு அனுமதி தருவீர்களா என்று கேட்டேன். அன்னார் எனக்கு அனுமதியளித்தார்கள். நான் என் பெற்றோருடைய வீட்டுக்குச் சென்றேன். என் தாயாரிடம், மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்? என்று கேட்டேன். தைரியமாக இரு என்று என் தாயார் கூறினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு என் குரல் கேட்டபோது, என் அன்பு மகளே! நான் சத்தியமிட்டுக் கூறுகிறேன்! நீ உன் வீட்டுக்கு திரும்பிவிடு என்று கூறினார்கள். ஆகவே நான் வீட்டுக்குத் திரும்பி விட்டேன்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: காலை விடியும் வரை முழு இரவும் நான் அழுது கொண்டிருந்தேன். அந்நாளில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) பின் அபீ தாலிப் அவர்களையும், ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்களையும் அழைத்து என்னைப் பிரிந்து விடுவது குறித்து அவர்களிடம் ஆலோசனை கேட்டார்கள்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களோ, (ஆயிஷா) அவர்கள் தங்களின் தூய துணைவி ஆவார்கள். நல்லதைத் தவிர வேறெதையும் நாங்கள் அறியவில்லை. இது முற்றிலும் பொய்யும் அடிப்படையற்றதும் ஆகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களோ, இறைத்தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் உங்களுக்கு எந்த நெருக்கடியையும் ஏற்படுத்தவில்லை. ஆயிஷா அன்றிப் பெண்கள் நிறையப் பேர் இருக்கின்றனர். பணிப்பெண்ணைக் கேளுங்கள். அவள் உங்களிடம் உண்மையைச் சொல்வாள் என்று கூறினார்கள்.

எனவே, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பணிப்பெண்ணை அழைத்து கேட்டபோது, இறைவன் மீது ஆணையாக! நான் குறையாக கருதும் அளவுக்கு அவர்களிடத்தில் எந்தவொரு விஷயத்தையும் காணவில்லை என்று கூறினார்.

அன்றைய நாளே இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உரை மேடையில் ஏறி நின்று அப்துல்லாஹ் பின் உபையைக் குறித்து அதிருப்தியை வெளிப்படுத்தியவாறு, முஸ்லிம்களின் ஜமாஅத்தே! என் வீட்டார் விஷயத்தில் எனக்கு மனவேதனையளித்த ஒரு மனிதன் விஷயத்தில் எனக்கு உதவி புரிபவர் யார்? அல்லாஹ்வின் மீதாணையாக! என் வீட்டாரிடம் நான் நல்லதை மட்டுமே அறிவேன் என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தங்களைக் காப்பாற்றுவேன். அவன் எங்களுடைய அவ்ஸ் குலத்தைச் சேர்ந்தவனாயிருந்தால் நாங்கள் அவனுடைய கழுத்தைத் துண்டித்து விடுகிறோம். கஸ்ரஜ் குலத்தைச் சேர்ந்தவனாக அவன் இருந்தால் தாங்கள் எங்களுக்கு என்ன உத்தரவிடுகிறீர்களோ அவ்வாறே தங்கள் உத்தரவை நாங்கள் நிறைவேற்றுகிறோம் என்று கூறினார்கள். அப்போது கஸ்ரஜ் குலத்தின் தலைவரான ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் எழுந்து நின்று ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களைப் பார்த்து, அல்லாஹ்வின் மீதாணையாக! நீங்கள் தவறாகச் சொல்லிவிட்டீர்; எங்களைச் சார்ந்த எந்த நபரையும் உம்மால் கொல்ல முடியாது என்று கூறினார்கள்.

இந்த விஷயத்தால் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் குலத்தைச் சார்ந்த சிலருக்கு உத்வேகம் தோன்றி அவர்களுக்கிடையில் சண்டையிடத் தயாராகி விட்டனர். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் அனைவருக்கும் புரிய வைத்து அவர்களை அமைதிப்படுத்தினார்கள். பிறகு தாமும் மௌனமாக அங்கிருந்து சென்று விட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: என் கண்ணீரும் நிற்கவில்லை; எனக்கு உறக்கமும் வரவில்லை. அந்நிலையில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் வந்து தஷஹ்ஹுத் கூறி இறைவனைப் புகழ்ந்துவிட்டு, ஆயிஷாவே! உன்னைக் குறித்து இன்னின்ன விஷயங்கள் என்னை வந்தடைந்துள்ளன. நீ நிரபராதியாக இருந்தால் அல்லாஹ் விரைவில் உன்னை குற்றமற்றவள் என்று அறிவித்து விடுவான். உன்னிடமிருந்து ஏதேனும் தடுமாற்றம் வெளிப்பட்டிருந்தால் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புகோரி அவன் பக்கம் திரும்பி விடு. ஏனெனில், அடியான் தன் பாவத்தை ஒப்புக் கொண்டு பாவமன்னிப்புக் கோரினால் அல்லாஹ் அவன் பக்கம் கருணையுடன் திரும்புகிறான் என்று கூறினார்கள்.

நான் என் பெற்றோரிடம், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் என்னைக் குறித்து கூறியதற்கு என் சார்பாக பதில் கூறுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவ்விருவரும், என்ன பதில் கூறுவது என்று தங்களுக்கு தெரியவில்லை என்று கூறினார்கள். பிறகு நானே கூறினேன். அல்லாஹ்வின் மீதாணையாக! என்னுடைய விவகாரத்தில் யூசுஃப் (அலை) அவர்களின் தந்தையை உவமையாகக் கருதுகிறேன். அவர்,

فَصَبْرٌ جَمِيْلٌ ؕ وَاللّٰهُ الْمُسْتَعَانُ عَلٰى مَا تَصِفُوْنَ ۝

'இப்பொழுது நன்கு பொறுமையினை மேற்கொள்வதே எனக்கேற்றதாகும். நீங்கள் கூறுபவற்றிலிருந்து அல்லாஹ்வின் உதவியையே தேட வேண்டும்' என்று கூறினார்.

ஆகவே பொறுமை செய்வதே எனக்குச் சிறந்ததாகும். அல்லாஹ் நிச்சயமாக விரைவில் நான் குற்றமற்றவள் என அறிவிப்பான்.

மிஸ்தஹ் பின் உஸாஸா உறவினராக இருந்த காரணத்தால் அவருடைய வறுமையின் காரணமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவருக்காக செலவு செய்து வந்தார்கள். மிஸ்தஹும் அவதூறு சுமத்தியவர்களுள் ஒருவராக இருந்தார். அல்லாஹ் என் குற்றமற்ற நிலையை வெளிப்படுத்தியபோது, அல்லாஹ்வின் மீதாணையாக! ஆயிஷா குறித்து

**(அவதூறு) கூறிய பின்பு ஒருபோதும் மிஸ்தஹுுக்காக நான் சிறிதும் செலவிட மாட்டேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது அல்லாஹ்,**

**'உங்களில் செல்வம் மற்றும் தயாள குணம் படைத்தோர் சத்தியம் செய்ய வேண்டாம்….' எனும் வசனத்தை இறக்கினான்.**

**இந்த வசனம் இறங்கியபிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ் எனக்கு மன்னிப்பளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன் என்று கூறிவிட்டு மிஸ்தஹ் அவர்களுக்கு ஏற்கனவே தாம் செலவிட்டு வந்ததை ஒருபோதும் நிறுத்தமாட்டேன் என்று கூறினார்கள்.**

***குத்பாவின் இறுதியில் ஹுுஸுூர் அவர்கள் கூறினார்கள்:***

**இன்று நான் மீண்டும் துஆவின் பக்கம் நினைவூட்ட விரும்புகின்றேன். பங்களாதேஷ் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் நிலையையும் வெகு விரைவில் மேம்படுத்துவானாக! பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் இவர்களின் நிலைமையையும் சிறந்ததாக்குவானாக! அநீதிக்குள்ளாக்கப்பட்ட பாலஸ்தீனர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் இவர்களின் நிலை மீதும் கருணை காட்டுவானாக! முஸ்லிம் நாடுகளுக்காகவும் (துஆ செய்யுங்கள்). அவர்களின் தலைவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்க வேண்டும்; அவர்கள் பொதுமக்களின் உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆக வேண்டும்; அநீதி இழைக்கக் கூடியவர்களாக ஆக வேண்டாம். ஏனென்றால் இவர்களின் அநீதியின் காரணமாகவே எதிரிகளுக்கும் துணிவு பிறக்கிறது. முஸ்லிம்கள் மீது அநீதி இழைத்துக் கொண்டே செல்லலாம். ஏனென்றால் இவர்களே உரிமையை செலுத்தாதவர்களாக இருக்கும்போது நம்மிடமிருந்து எவ்வாறு உரிமையை கேட்பார்கள் என்று அவர்களுக்கு தெரிந்துள்ளது. முஸ்லிம் சமுதாயத்தின் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக!**

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**